முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் ஏனாதிநாத நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

21.11.2018, புதன்கிழமை

1. **காப்பு தந்திடும் கந்தவேலே**
**கருணை வடிவாக வந்த ஞானவேலே**
**ஒப்பு கொண்டு உலகை காக்க**
**ஓங்கார ஆசான் தவசித்தியாக வந்த**
2. வந்தநல் ஆறுமுக அரங்கனே
வள்ளலேல உன் பெருமை கூறி
சிந்தைபட ஒளி சூட்சும நூலை
செப்பிடுவேன் **விளம்பி தேளின் திங்கள்**
3. **திங்களிலே பஞ்சதிகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 5ம் நாள் 21.11.2018, புதன்கிழமை)**
**தேசிகனுக்கு ஏனாதிநாதர் யானும்**
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
உயர்வான சீடர்களாக அரங்கன்
4. அரங்கன் சன்மார்க்க நெறிமுறை
அகிலமெங்கும் உருவாக்கி பரப்பிவர
வரங்கள் பெருகி கலியுகமும்
வள்ளல் தன்மை மிகுந்த நல்
5. மிகுந்தநல் ஞானயுகம் ஆகும்
மேன்மைதரும் ஞான அமைப்பை
தகுந்தபடி அயல் தேசங்களில்
தவராசன் நாமம் சொல்லி அமைத்திட
6. அமைத்திட ஆற்றல் பெருக்கிட
அகிலமே ஆறுமுகன் ஆளுகின்ற
நேமமிக்க ஞான தேசமாகும்
நிலவுலகமே தருமமும் பெருகி
7. பெருகி மேன்மை காண்கும்
பிசகில்லா அரங்கன் சீடர்களே
முருகன் ஆளுமையாக உலகில்
முழுமைபட ஆட்சி புரிய நேரும்
8. நேருமைமிக்க அரங்கன் நெறி
நீதி காக்கும் நெறியாக வளர
வறுமை மக்களின் கஷ்டமெல்லாம்
வருமுலகில் அகன்று சிறப்பு காண்கும்
9. காண்கவே மக்களிடை பக்குவம்
கண்ணியம் மீறா வாழ்வு திடமும்
உண்மை ஆன்மீக செயல் முறையும்
உயர்வான வாழ்வாதாரமும் பெருகி

10. பெருகியே கலியுக மக்களுக்கு
பிரச்சினை துன்பங்கள் இல்லா
முருகப்பெருமான் தயவுபட
முழுமைபட ஞானவான்களாக வாழ்ந்து

11. வாழ்ந்துமே இந்த கலியுகமே
வாழும் ஞானி அரங்கன் திருவடி
தாள்பணிந்து செயல்பட கலியிடர் விலகி
தரணியே ஞானயுகமாகும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் ஏனாதிநாதர் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உலக மக்களுக்கு சர்வ பாதுகாப்பையும் தந்தருளும் கந்தவேலனே கருணையே வடிவமாக வந்துதித்து மக்களை ஞானவழியினில் நடத்திடும் ஞானவேலே உலகினை காத்திடவே அவதாரமாக ஆகிட்ட ஓங்காரக்குடிலாசானே முருகப்பெருமானின் தவசக்தி வடிவமாக வந்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 5ம் நாள் 21.11.2018, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே ஏனாதிநாதர் நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் ஏனாதி நாயனார்.

உலகினில் கலியுகத்தின் கொடுமைகள் நீங்கி முருகப்பெருமானின் தலைமையினால் ஆகிய ஞானிகள் ஆட்சியை உடைய ஞானயுகம் அமைந்திடவே உரைக்கின்றேன் நூலினை உத்தமமகா ஞானி அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சீடர்களாக உள்ளவர்களெல்லாம் அரங்கன் கூறும் சன்மார்க்க நெறி முறைகளை உலகமெங்கும் பரப்பி உலகமெங்கும் சன்மார்க்க சங்கங்களை உருவாக்கி அனைத்து மக்களும் அரங்கனின் சன்மார்க்க நெறியில் நடந்திட வகைகள் செய்திட வேண்டும்.

அவ்விதமே உலகினில் உள்ள மக்களெல்லாம் சன்மார்க்க நெறியில் வந்திட உலகினில் முருகப்பெருமானின் வரங்களை மக்கள் அதிகமாக பெறுவார்கள். மக்கள் பெறும் வரங்கள் அதிகமாக அதிகமாக உலகினை துன்பத்தில் ஆழ்த்துகின்ற கலியுகத்தின் கொடுமைகளும் குறைந்து கலியுகம் வள்ளல் தன்மை மிகுந்த ஞானயுகமாக மாறிடும்.

ஆகவே சீடர்களே சகல மேன்மைகளையும் தந்தருளும் அரங்கனின் தூயஅமைப்பாம் ஞானஅமைப்பினை முறையோடு அயல்நாடுகளில் தவராசன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் பெயரினில் அமைத்திட ஆங்கே அரங்கனின் பெயரால் அமைந்திட்ட சங்கங்களின் செயல்பாடுகளினால் அந்த அந்த நாடுகளின் ஆற்றல் பெருகிடும். ஆற்றல் பெருகி உலகமே முருகப்பெருமான் ஆளுகின்ற நேமமும், அன்பும், சகோதரத்துவமும் சமதர்மமும் மிக்க ஞான தேசங்களாக ஆகிடும்.

உலகமெங்கும் ஞானிகள் அருளினால் தருமங்கள் பெருகி உயர்ந்த நிலையை அடைந்திடும். உண்மைமிக்க நெறி தவறாத அரங்கனின் சீடர்களே முருகப்பெருமானின் சார்பினிலே இவ்வுலகினை ஆட்சி புரிந்திடும் அமைப்புகள் உருவாகிடுமப்பா. நேர்மைமிக்க ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தூயநெறி இவ்வுலகின் நீதியை காத்து நிலைநிறுத்தும். அரங்கனின் நெறி உலகினில் பரவபரவ துன்பப்படுகின்ற வறுமையுள்ள மக்களின் துன்பமும் வறுமையும் நீங்கி சிறப்பான நிலையை அடைந்திடும்.

கலியுகத்தின் பிடியினில் அகப்பட்டு துன்பப்படுகின்ற மக்களுக்கு அவர்களது துன்பங்கள் எல்லாம் விலகி முருகப்பெருமானின் தயவு பெருகி முழுமைப்பெற்ற ஞானவான்களாக ஆகி கலியுக மாயையில் இருந்து விடுபட்டு ஞானவான்களாக வாழ்ந்து இந்த கலியுக மக்களெல்லாம் வாழும் ஞானி, அவதார ஞானி முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடிகளில் பயபக்தியுடன் தாள்பணிந்து செயல்பட உலகைப் பற்றியுள்ள கலியுகத்தின் துன்பமெல்லாம் முற்றிலும் விலகி உலகம் முழுதும் ஞானயுகமாக ஆகிடும் என கலியுகம் ஞானயுகமாக ஆகிட சீடர்களின் செயல்பாடு குறித்து தமது ஒளி சூட்சும நூல் மூலம் உரைக்கின்றார் மகான் ஏனாதி நாயனார்.

–சுபம்–